**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.193/2025</u>**

ம.சா.2 பெருமாள் த/பெ செல்வம் நாள் : 07.07.2026

**<u>2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இறந்த முனியப்பன் டாஸ்மார்க் அருகே கடை வைத்துள்ளார். நான் தேவிகாவுக்கு உறவினரா என்றால் இல்லை தெரிந்தவர். டாஸ்மார்க் கடை முடிய பிறகுதான் பீப் கடை முடிவிட்டு முனியப்பன் செல்வார் என்றால் சரிதான். எங்கள் ஊருக்கும் பார்சம்பேட்டை கேட்டிற்கும் 7, 8 கி.மீ என்றால் சரிதான். முனியப்பன் குடித்துவிட்டு அதிவேமகாவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி விபத்து ஏற்படுத்தி கொண்டார் என்றால் தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் முனியப்பன் முன்னால் சென்று கொண்டிருந்தார் அவருக்கு பின்னால் நான் சென்று கொண்டிருந்தேன். எதிரே Scooty வாகனம் வந்து இருவரும் மோதி கொண்டனர், முனியப்பன் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவரை ஆம்புலன்ஸில் ஏற்றி விட்டு நான் வீட்டிற்கு சொன்றுவிட்டேன். விபத்து யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. விபத்து ஏற்பட்ட பின்னர் தான் சென்றேன். நான் மேஸ்திரி வேலை செய்கிறேன். தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்றால் தெரியவில்லை. விபத்து சமயத்தில் இரு வாகனங்களின் பதிவு எண்களை நான் கவனிக்கவில்லை. கிழக்கில் இரயில்வே பாலம் உள்ளது. மேற்கில் ஆறு உள்ளது. வடக்கில் சாலை உள்ளது. தெற்கில் முனியப்பன் வீட்டிற்கு செல்லும் மண் சாலை உள்ளது. இதற்கு இடையில் தான் விபத்து நடந்த இடம் உள்ளது. வலது புறம் மண் ரோட்டில் தான் விபத்து நடந்தது. விபத்தை நேரில் பார்க்காமல் தேவிகாவிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.